## 8.43 பேரூராட்சிகள் நிர்வாகம் – பேரூராட்சிகளில் காலிப்பணியிடங்களை நிரப்புவதற்கான வரையறைகள் – நிர்ணயம் செய்ய குழு அமைத்தல் – நகர்புற உள்ளாட்சி அமைப்புகளுக்குக் கூடுதல் பொறுப்புகள், அதிகாரங்கள் வழங்குவது குறித்த உயர்நிலைக்குழுவின் பரிந்துரை ஆணைகள் – வெளியிடப்படுகின்றன.

---

நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (பேரூ.1) துறை

அரசாணை (நிலை) எண்.5 நாள் : 14.01.1998

படிக்கப்பட்டவை :

1. அரசாணை (நிலை) எண். 104, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (தேர்தல்) துறை நாள். 1.8.2007
2. பேரூராட்சி இயக்குநரின் கடித ந.க.எண். 24373/07/அ3 நாள் 28.12.2007

ஆணை :

நகர்புற உள்ளாட்சி அமைப்புகளுக்குக் கூடுதல் பொறுப்புகள் அதிகாரங்கள் வழங்குவது குறித்த உயர்நிலைக் குழு நகர்புற உள்ளாட்சி அமைப்புகளில் காலிப்பணியிடங்களை நிரப்புவதற்கான வரையறைகள் (Norms) நிர்ணயம் செய்வது தொடர்பாக கீழ்க்கண்ட பரிந்துரையை செய்துள்ளது.

''பரிந்துரை – 10 நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளில் காலிப்பணியிடங்களை நிரப்புவதற்கான வரையறைகளை (Norms) நிர்ணயம் செய்தல்.

நகராட்சி நிர்வாக ஆணையரை தலைவராகவும், அனைத்து நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர்களை உறுப்பினர்களாகவும், நகராட்சி நிர்வாக இணை ஆணையரை உறுப்பினர் – செயலராகவும் கொண்டு ஒரு குழு அமைக்கலாம். இக்குழு, ஒவ்வொரு நிலையிலும் உள்ள நகராட்சிகளுக்கு உண்டான பணியாளர்கள் வரையறையினை முடிவு செய்து கூடுதலாக உள்ள நகராட்சி நிர்வாகப் பணியாளர்களை, ஐம்பது பேரூராட்சிகளை நகராட்சிகளாக மறு வகைப்பாடு செய்வதால் அத்தகைய நகராட்சிகளுக்கு தேவைப்படும் பணியாளர்களை மாற்றுவது குறித்தும் கருத்து தெரிவிக்க வேண்டும்'' என மாநில மூன்றாவது நிதி ஆணையம் பரிந்துரைத்துள்ளது. மேற்படி பரிந்துரையை அரசு ஏற்றுக் கொண்டுள்ளது. இதற்கான அரசாணை 1.8.2007 அன்று வெளியிடப்பட்டுள்ளது.

இதேப் போன்று பேரூராட்சிகளுக்கும் ஒரு குழு அமைத்து, பேரூராட்சி பணியிடங்களுக்கான வரையறைகளை நிர்ணயம் செய்ய ஆணை வெளியிடலாம் என உயர்நிலைக்குழு பரிந்துரைத்துள்ளது.''

2. இந்நிலையில் மேலே இரண்டாவதாகப் படிக்கப்பட்ட கடிதத்தில் பேரூராட்சிகளின் இயக்குநர் உயர்நிலைக் குழு பரிந்துரைத்தவாறு நகராட்சி அமைப்புக்கான பணியாளர்கள் வரையறை குழுவினைப் போல், பேரூராட்சிகளிலும் பேரூராட்சிகளின் இயக்குநரைத் தலைவராகவும், பேரூராட்சிகளின் இணை இயக்குநர் உறுப்பினர் செயலராகவும் மற்றும் அனைத்து 18 மண்டல பேரூராட்சிகளின் உதவி இயக்குநர்கள் உறுப்பினர்களாகவும் கொண்ட குழுவை அமைக்கலாம் என்று கோரியுள்ள பேரூராட்சிகளின் இயக்குநர் அவர்களின் கருத்துருவை அரசு கவனமாக ஆய்வு செய்து ஏற்க முடிவு செய்துள்ளதுள்ளது.

3. அதன்படி கீழ்க்கண்டவாறு குழுவை அமைக்க அரசு ஆணையிடுகிறது:–

| | | |
|---|---|---|
| 1. பேரூராட்சிகளின் இயக்குநர் | – | தலைவர் |
| 2. பேரூராட்சிகளின் இணை இயக்குநர் குறளகம், சென்னை – 108. | – | உறுப்பினர் – செயலர் |
| 3. அனைத்து மண்டல பேரூராட்சிகளின் உதவி இயக்குநர் | – | உறுப்பினர்கள் |

**4.** மேற்படி குழு ஒவ்வொரு நிலையிலும் உள்ள பேரூராட்சிகளுக்கு உண்டான பணியாளர்கள் வரையறை முடிவு செய்து மண்டல பேரூராட்சி உதவி இயக்குநர் அலுவலகங்களிலும் பேரூராட்சி இயக்குநகரகரத்திலும் உள்ள வேலை பளுவினை மதிப்பீடு செய்து, தேவைப்படும் இடங்களில் பதவிகளை உருவாக்கவும் குறைக்கவும் பரிந்துரை செய்ய வேண்டும்.

**5.** மேலும், இக்குழு தனது பரிந்துரைகளை நான்கு மாதத்திற்குள் அரசின் பரிசீலனைக்காகவும் ஆணைக்காகவும் அனுப்பி வைக்க அறிவுறுத்தப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

**கே. தீனபந்து**

அரசு செயலாளர்